# Spiritual portion
# DAM, ACCRA November 2024

அன்பான மாவட்ட அப்போஸ்தலர்கள் மற்றும் மாவட்ட அப்போஸ்தலரின் உதவியாளர்களே,

இப்போது பல வாரங்களாக ''நியூ அப்போஸ்தலிக் சர்ச்-இன் லிட்டர்ஜி '' மற்றும் ஊழியர்களுக்கான வழிகாட்டி'' திருச்சபையின் ''nak.org'' இணையதளத்தில் கிடைக்கப்பெறுகின்றன. இது திருச்சபையின் ஒற்றுமையைப் பெலப்படுத்த உதவும் என நாம் நம்புவதினால் இந்த முன் முயற்சியை எடுத்துள்ளோம். நமது திருச்சபையில் தெளிவான மற்றும் துல்லியமான விதிகள் உள்ளன என்பதை நன்கு வரையறுக்கப்பட்ட வழிபாட்டு முறைகளுடன் பொதுமக்களுக்குக் காட்டுவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது மற்றும் அதன்மூலம் திருச்சபையின் நேர்மறையான சாயலை உருவாக்குவதற்குமாகும். நமது அங்கத்தவர்களிடமிருந்து வரும் ஆரம்ப எதிர்வினைகள் மிகவும் நேர்மையானவை. குறிப்பாக இது ஆப்பிரிக்காவில் உண்மையாக உள்ளது. இணையத்தின் பரவலான பயன்பாட்டிற்கு நன்றி – நமது அங்கத்தவர்கள் பலர் இப்போது தங்களிடம் முன்பு இல்லாத தகவல் மற்றும் ஆவணங்களை அணுகமுடியும்.

நியூ அப்போஸ்தலிக் சர்ச்-இன் லிட்டர்ஜியின் வெளியீடு உங்களுடன் இறுதி ஆசீர்வாதத்தை விவாதிப்பதற்கு எனக்கு ஒரு வாய்ப்பை அளிக்கிறது. லிட்டர்ஜியின் இந்த உறுப்புகளின் முக்கியத்துவம் எப்போதும் நன்கு புரிந்து கொள்ளப்படவில்லை என்ற எண்ணம் எனக்கு உள்ளது.

இறுதி ஆசீர்வாதம் 2 கொரிந்தியர் 13:14 லிலுள்ள வார்த்தைகளைக் கொண்டு திருச்சபையின் மீது உச்சரிக்கப்படுகிறது.

*''கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென்''*

இவ்வார்த்தைகளின் பொருளும் நோக்கமும் யாது?

**ஒரு விதிமுறையை விட – ஓர் ஆசீர்வாதம்।**

நடத்துபவர் வழிபாட்டு நடவடிக்கையின் முடிவைக் குறிக்க இவ்வார்த்தைகளை உச்சரிக்கிறார். வசனத்தின் வார்த்தை ஒரு விருப்பத்தைத் தெரிவிக்கிறது. விசுவாசிகள் பாதுகாப்பாக வீட்டிற்குச் செல்ல வேண்டும் என்று விரும்புவது போல அவர் கிருபை, அன்பு மற்றும் ஐக்கியத்தை விரும்புவதாக ஒருவர் எண்ணத் தூண்டப்படலாம். உண்மையில் அது அதையும் விட அதிகமானது, இந்த நோக்கத்திற்காக தேவனால் ஆணையிடப்பட்ட ஒரு ஊழியரால் உச்சரிக்கப்படும் போது இவ்வார்த்தைகள் ஒரு உண்மையான ஆசீர்வாதமாக அமைகிறது. அவை தெய்வீக வல்லமையால் நிரம்பியிருக்கிறது. மேலும் அவை கேட்போருக்கு ஒரு ஆவிக்குரிய பலனை அளிக்கிறது.

இந்த ஆசீர்வாதத்தில், தேவன் தமது கிருபை, அன்பு மற்றும் ஐக்கியம் ஆகியவை கேட்போரின் அனுதின வாழ்வில் துணைசெல்லும் என்பதாக வாக்குறுதி அளிக்கிறார். தேவன் அனைத்தையும் செய்கிறபடியால் அவர் தாம் செய்வாரென சொல்லுகிறார். திருச்சபையார் இது உண்மையாக நடக்கும் என்ற உறுதியுடன் இருக்கிறார்கள். கேட்போர் அனைவருக்கும் இவ்வாக்குறுதி அளிக்கப்படுகிறது. ஆனால் எல்லா ஆசீர்வாதங்களைப் போலவே அதன் விளைவு அதைப் பெறுபவரின் விசுவாசத்திலும் நடத்தையிலும் தங்கியுள்ளது.

எனவே இறுதி ஆசீர்வாதமானது ஒரு வாக்குத்தத்தம் மற்றும் தேவனிடமிருந்து வந்த ஒரு புத்திமதியாகவும் உள்ளது.

**ஒரு திரியேகத்துவ ஆசீர்வாதம்**

2 கொரிந்தியர் 13:14 திரித்துவத்திற்குத் தெளிவான குறிப்பைத் தருகிறது. தேவன் ஒருவராகவும் மூவரில் ஒருவராகவும் இருக்கிறார் என்பதை ஞாபகப்படுத்திக் கொள்வோம். தெய்வீக நபர்களான ஒவ்வொருவரும் – பிதா, குமாரன், மற்றும் பரிசுத்த ஆவியானவர் – உண்மையுள்ள தேவன். தெய்வீக நபர்கள் ஒருவருக்கொருவர் வேறுபட்டவர்கள் ஆனால் ஒரு தேவன் மட்டுமே.

இந்த சூழ்நிலையிலேயே இறுதி ஆசீர்வாதம் புரிந்து கொள்ளப்படவேண்டும். பேசுகிறவர் ஒரே தேவன், சர்வவல்லமையுள்ள தேவன், மற்றும் பூரணமான தேவன், தேவனின் செயல்கள் எப்போதும் பிதா, குமாரன் மற்றும் பரிசுத்த ஆவியானவரின் செயல்களாக இருக்கின்றன. எனவே கிருபை, அன்பு மற்றும் ஐக்கியம் ஆகியவை ஒவ்வொரு தெய்வீக நபர்களுடனும் இணைக்கப்படவில்லை, ஆனால் அவை மூவருக்கும் பொதுவானவை. ஒருவர், பிதா கிருபை அருளுகிறார், குமாரன் ஐக்கியத்தை அளிக்கிறார் மற்றும் ஆவியானவர் அன்பாய் இருக்கிறார் என்று சொல்லலாம்.

# Spiritual portion
# DAM, ACCRA November 2024

**இயேசு கிறிஸ்துவின் கிருபை**

இவ்வார்த்தைகளைக் கொண்டு தேவன் இயேசு கிறிஸ்துவில் நமக்கு அளித்திருக்கும் கிருபையைக் குறித்து நமக்கு நினைவூட்டுகிறார்: ''அவர் நம்மைத் தெரிந்துகொண்டு அவருடைய மகிமைக்குரிய உடன் சுதந்தரருமான பிள்ளைகளாக்கி உள்ளார். (எபேசியா 3-14). அவர் நம்முடைய பாவங்களை மன்னித்திருக்கிறார், நமது தகுதிகளைவிட அவருடைய கிருபைக்காகத்தான் நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

அவருடைய ஆசீர்வாதத்துடன் அவருடனான நம்முடைய சந்திப்பை முடிப்பதன்மூலம், தேவன் உத்தரவாதம் அளிக்கிறார் அதாவது

- என்ன நடந்தாலும் நாம் அவரது பிள்ளைகளாக நிலைத்திருப்போம் - அவர் ஒரு போதும் நமது தெரிந்துகொள்ளுதலை கேள்விக்குள்ளாக்க மாட்டார்.
- நாம் எப்போதும் தீயவனின் குற்றச்சாட்டுக்கு எதிராக நம்மைப் பாதுகாக்க கிறிஸ்துவில் நம்பிக்கைக் கொண்டிருக்கக் கூடியவர்களாயிருப்போம் (ரோமர் 8: 34).
- நாம் அவருடைய கிருபையில் நம்பிக்கைக் கொண்டிருக்கமுடியும் - இந்த கிருபையே அவரது ராஜ்யத்திற்குள் நாம் பிரவேசிப்பதற்குத் தேவையான பூரணத்துவத்தை அடைவதற்கு அனுமதிக்கும் (1 பேதுரு 1: 13).

எவ்வாறாயினும், இந்த உத்தரவாதம் தேவனுக்குப் பிரியமான நடத்தையை வளர்த்துக் கொள்பவர்களுக்கு மட்டுமே பொருந்தும். தேவன் நம்மை உற்சாகப்படுத்துகிறார், எதற்கெனில்,

- நாம் பாவிகளாகையால், அவருடைய கிருபையில் முழுவதுமாக சார்ந்துயிருக்கையில் தேவனுக்கு முன்பாகவும், மற்றவர்களுக்கு முன்பாகவும் மனத்தாழ்மையுள்ளவர்களாய் இருப்பதற்கு;
- அவரது மகிமையை சுதந்தரிப்பதற்கென்று அழைக்கப்பட்டவர்கள் தாங்கள் தேவனின் உண்மையுள்ள பிள்ளைகளைப் போல நடந்துகொள்வதற்கு;
- நாம் அவரிடம் பெற்றுள்ள ஈவுகளை மற்றவர்களின் ஊழியத்திற்காகப் பயன்படுத்துவதற்கு (1பேதுரு 4: 10).

**தேவனின் அன்பு**

நாம் வீடு செல்லும் முன்பு திரும்பவும் தேவன் தமது அன்பை நமக்கு அறிவிக்கிறார். நாம் என்றென்றைக்கும் அவரோடே கூட இருக்கக் கூடியவர்களாவதற்கு நம்மை சாத்தியமுள்ளவர்களாக்குவதற்கே எல்லாவற்றையும் அவர் செய்கிறார். நமது இரட்சிப்பைத் தடுக்கக்கூடிய எந்தத் தடையையும் அவர் நம் பாதையிலிருந்து அகற்றுவார். நாம் இரட்சிக்கப்படுவதற்கு அவசியமானவற்றை அவர் நமக்குத் தருவார்.

பதிலுக்கு, அனைத்து சூழ்நிலைகளிலும் அவருடைய அன்பில் நிலைத்திருக்கும்படி அவர் நம்மைக் கேட்டுக் கொள்கிறார். நாம் பின்வருபவைகளுடன் டிவைன் சர்வீஸ்-ஐ விட்டுப் போக வேண்டுமென தேவன் விரும்புகிறார்:

- அவருடைய கட்டளைகளைக் காத்துக் கொள்வதற்கான உறுதிப்பாட்டுடன்;
- கணக்குப் பார்க்காமல் அவருக்கு அன்புடன் ஊழியம் செய்ய வேண்டும் என்ற தீர்மானத்துடன்
- தேவன் தங்களை நேசிக்கிறதைப் போல நம் அயலவரை நேசிக்க விரும்புவதுடன்.

**பரிசுத்த ஆவியானவரின் ஐக்கியம்**

ஆவியின் மூலமே நாம் தேவனை அறியவும் அவருடைய சித்தத்தை அறியவும் முடியும். தேவன் நம்மை வழிநடத்தவும், தேற்றவும் மற்றும் பெலப்படுத்தவும் தொடர்ந்து நம்முடன் பேசுவார் என வாக்குறுதி அளிக்கிறார். பிரசங்கத்திலும் நம் மனசாட்சியிலும் அவர் நமக்கு சொல்லுபவைகளுக்குக் கவனம் செலுத்துபவர்களாக இருக்குமாறு அவர் பரிந்துரைக்கிறார்.

# Spiritual portion
# DAM, ACCRA November 2024

கிறிஸ்துவின் சுதந்தரத்தில் உள்ள ஐக்கியம் அவரது பாடுகளில் ஒற்றுமையுடன் கைக்கோர்த்து செல்கிறது (ரோமர் 8:17; பிலிப்பியர் 3:10). நாம் இன்னும் உபத்திரவங்களை அனுபவிப்போம் என்று நம்மை தேவன் எச்சரிக்கிறார். ஆனாலும் நாம் பயப்படுவதற்கு ஒன்றுமில்லை. அவர் நம்மோடிருக்கிறார். நம் ஜெபங்களை அவர் கேட்டு அவைகளுக்கு பதில் அளிப்பார். நாம் எப்போதாவது ஜெபிக்க மிகவும் பெலவீனமாக இருந்தால், ஆவியானவர் நமக்காக வேண்டுதல் செய்வார் (ரோமர் 8:26–27).

ஆவியானவரின் ஐக்கியமும் ஒரு அன்பின் ஐக்கியமாகும். நாம் நமது அனுதின வாழ்வுக்குத் திரும்புகையில், தேவன் நம்மை மற்றவர்களை அவர்கள் இருக்கும் வண்ணமாகவே நேசிக்கும் திறனையுடையவர்களாக்கியுள்ளார் என்பதை நினைவு கூருவோம் – இதைத்தான் நாம் விரும்புகிறோம், அதை செயல்படுத்துகிறோம், மேலும் தெய்வீக உதவிக்காக கர்த்தரிடம் மன்றாடுகிறோம்.

இறுதி ஆசீர்வாதமானது திருச்சபையில் ஆவியானவரின் நீடிக்கும் பிரசன்னத்திற்கு சான்றளிக்கிறது. நாம் கவலைப்படவேண்டிய காரணம் ஒன்றும் இல்லை: ஆவியானவர் மணவாட்டியை மணவாளனுடன் பூரணமான ஐக்கியத்திற்குள் நடத்துவதை ஒன்றும் தடைசெய்ய மாட்டாது.

இறுதியாக, பரிசுத்தவான்களின் ஐக்கியத்திலிருந்து ஆவியானவரின் ஐக்கியத்தைப் பிரிக்க முடியாது. நாம் அனைவரும் ஒரே ஆவியையும், ஒரே விசுவாசத்தையும் மற்றும் ஒரே வருங்காலத்தையும் உடையவர்கள். நாமனைவரும் ஒரே வார்த்தையையும் ஒரே அப்பத்தையும் பெறுகிறோம். நாம் பிரிவதற்கு முன், தேவன் நாமனைவரும் கிறிஸ்துவின் சரீரமாகிய ஒரே சரீரத்தின் அவயங்கள் என்பதை மறவாதிருக்கும்படி நமக்குப் புத்தி சொல்லுகிறார். நாம் ஒருவரோடொருவர் ஐக்கியமாய் இருந்தால் மட்டுமே தேவனோடே உண்மையாகவே ஐக்கியம் உடையவர்களாய் இருக்க முடியும் (1 யோவான் 1:3–7). நாம் எப்போதும் ஒருவருக்கொருவர் வித்தியாசமாக இருப்போம். ஆனபோதிலும் நாம் நமது வேறுபாடுகளின் கைதிகளாக இருப்பதை தேவன் விரும்புகிறதில்லை! இவைகளை மேற்கொண்டு திருச்சபையின் ஒற்றுமைக்காக சுறுசுறுப்புடன் பங்களிப்புச் செய்யும்படி தேவன் நம்மைக் கேட்டுக் கொள்கிறார். விசுவாசிகளின் ஐக்கியம் ஒரு ஆவிக்குரிய ஒன்று மட்டுமல்ல என்பதை அவர் நமக்கு நினைப்பூட்டுகிறார். இது ஒரு உறுதியான வழியில் வெளிப்படுத்தப்படுகிறது, அது தேவையுள்ளவர்களுடனான ஒற்றுமையிலும் இவ்வுலக ஆஸ்திகளைப் பகிர்ந்துகொள்வதாலும் (1 யோவான் 3:17–18).

இந்த சில எண்ணங்கள் முழுமையிலிருந்து வெகுதொலைவில் உள்ளன. அப்போஸ்தலர் பவுலின் இவ்வார்த்தைகளை விருத்தியடையச் செய்வதற்கு நிச்சயமாக வேறு வழிகள் உள்ளன. நான் இறுதி ஆசீர்வாதத்தை வலியுறுத்த விரும்புகிறேன். கடைசியான ஒரு விஷயம்: இந்த ஆசீர்வாதம் அதை உச்சரிப்பவருக்கும் பொருந்தும்.அன்பான அப்போஸ்தலர்களே, நீங்கள் இதை அனுபவிப்பீர்கள் என நான் உண்மையாக நம்புகிறேன்!